| O.S.No.76/2024 | PW:2 திரு. செந்தில்குமார் த/பெ. திரு.சம்பத் | 27-10-2025 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :**

1) நான் +2 வரை படித்துள்ளேன். எனக்கு எழுதப்படிக்க தெரியும். எனது சொந்த ஊர் திருமணியாகும். சாந்தகுமாரர் மனைவி பவானியை தெரியும். பிரதிவாதியையோ அவரது கணவரையோ தெரியுமா என்றால் தெரியாது. பவானி என்பவர் முகேஷ் என்பவருக்கு கிரைய ஒப்பந்தம் போட்ட விஷயம் தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது. வாதி வின்னரசிக்கு கிரையம் கொடுத்த பாபு என்பவரை தெரியும். அவரை எப்படி தெரியும் என்றால் வாதி வின்னரசியின் இடத்தை பயிர் செய்து வருவதால் தெரியும். தாவா இடத்தில் கடந்த 10 ஆண்டுகளாக வின்னரசி கிரையம் வாங்கியதிலிருந்து பயிர் செய்து வருகிறேன்.

2) வின்னரசி தாவா இடத்தை இன்றைய தேதிவரை நேரடியாக பயிர் வைக்கவில்லை. குத்தகைக்கு நான் தான் பயிர் செய்து வருகிறேன். பாபுவிடம் கிரையம் வாங்கி சொத்தின் விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. 1 ஏக்கர் 30 செண்ட் என்று சொன்னார்கள் அதன் நான்கெல்லைகள் தெரியாது. தாவா சொத்தினை வாதி கிரையம் பெறும்போது நான் இல்லை. தாவா சொத்தில் நெல் மற்றும் வேர்கடலை பயிரினை செய்து வருகிறேன். தாவா சொத்தில் ஒரு பம்புசெட் உள்ளது. ஒரு ஆண்டுக்கு 2 போகம் விளையும், செலவு மற்றும் குத்தகை போக ஒரு போத்திற்கு சுமார் 5000 வருமானம் வரும், வாதிக்கு 4ல் 1 பாகம் குத்தகை கொடுப்பேன். நெல் விளைச்சலாக இருந்தால் 1 போத்திற்கு 35 மூட்டைகள் வரும், வேர்கடலையாக இருந்தால் ஒருபோகத்திற்கு 7 முதல் 8 மூட்டைகள் விளையும். குத்தகையினை விலை நிலவரத்திற்கு ஏற்றாற்போல் பணமாக கொடுப்பேன்.

3) என்னிடம் காட்டப்படும் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள விவரங்களை நான் படித்து பார்க்கவில்லை. ஆனால் வழக்கறிஞர் படித்து சொன்னார். தாவா சொத்தினை வாதி கிரையம் வாங்கியது பற்றி அச்சொத்தினை நான் பயிர்செய்வது பற்றியும், வழக்கறிஞர் படித்து சொன்னார். பிரதிவாதி தாவா சொத்தினை நீதிமன்றம் மூலமாக சுவாதீனம் எடுக்க வந்தார்கள் நான் பயிர் வைத்து வருகிறேன் என்று சொன்னேன். ஆனால் எந்த வருடம் என்று தெரியாது. நீதிமன்றத்தில் இருந்து மதியம் வந்தார்கள். நீதிமன்றத்திலிருந்து வந்து என்னிடம் கேட்டார்கள் அப்போது தாவா இடத்தில் நான் பயிர் செய்து வருகிறேன் என்றும், எதுவாக இருந்தாலும் வாதியின் கணவரை கேட்டுக்கொள்ளுங்கள் என்று சொன்னேன். மேற்படி தகவலை வாதியின் கணவரிடம் சொன்னேன். வாதி மற்றும் அவரது கணவர் அந்த இடத்திற்கு வரவில்லை. விண்ணரசி சுந்தரேசன் வகையறாவிடம் வாங்கிய மற்றொரு சொத்தில் ஒரு மாட்டு கொட்டகை உள்ளது அங்கிருந்து கொண்டு நான் பயிர் செய்து வருகிறேன். தாவா சொத்தில் மாட்டு கொட்டகை இல்லை.

4) தாவா சொத்தில் பம்பு செட், கிணறு மட்டும் தான் உள்ளது. நான் தாவா சொத்தில் பயிர் செய்யவில்லை என்றாலும், மேற்படி விஷயத்தினை வாதியே வழக்கில் சொல்லவில்லை என்றாலும், தற்போது வழக்கிற்காக தாவா சொத்தினை பயிர் செய்து வருவதாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தினை எனது மாமா பயிர் வைத்திருந்தார் அதன் பிறகு நான் பயிர் வைத்து வருகிறேன்.

**<u>மறு விசாரணை</u>** : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2025.10.27 19:11:39 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**